

# தொழிற்பயிற்சி நிலைய (ஐ.டி.ஐ) மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டி



# Career Guidance for I.T.I Students

வெளியீடு

இயக்குநர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்ககம்,
(தொழில்நெறி வழிகாட்டுதல் பிரிவு)
கிண்டி, சென்னை 32.

# தொழிற்பயிற்சி நிலைய (ஐ.டி.ஐ) மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டி



டாக்டர். என்.சுப்பையன், இ.ஆ.ப.,
இயக்குநர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044-22501525
நிகரி : 044-22501595
மின்னஞ்சல் : detchennai@gmail.com

## முன்னுரை

இக்கையேட்டில், தமிழ்நாட்டிலுள்ள 568 தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு தேவைப்படும் தகவல்களான, பொறியியல் சார்ந்த உயர் படிப்புகள், கல்வி உதவித்தொகை, திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், அரசு வேலைவாய்ப்புகள் மற்றும் சுய வேலைவாய்ப்பு திட்டங்கள் உள்ளிட்ட மிகவும் பயனுள்ள தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

இக்கையேடு மாணவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்குரிய உயர் கல்வி மற்றும் வாழ்க்கை தொழிலை தெரிவு செய்வதற்கு உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறேன்

சென்னை – 600 032
நாள்:– 01. 02. 2017

இயக்குநர்

“திறன் பெறுவோம் வளம் பெறுவோம்”
தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

## அட்டவணை


| வரிசை எண் | விவரம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | உயர்கல்வி | |
| | அ. பட்டயப் படிப்புகள் (Diploma Course) | 3 |
| | ஆ.தொலைதூரக் கல்வி மூலம் பொறியியல் பட்டயப் படிப்புகள் | 5 |
| | ஆ.தொலைதூரக் கல்வி மூலம் பொறியியல் பட்டப் படிப்புகள் | 6 |
| | இ. பட்டப்படிப்புகள் (Degree Course) | 7 |
| | ஈ. பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற தவறியவர்களுக்கான வாய்ப்புகள் | 7 |
| 2 | மாணவ, மாணவியர்களுக்கான தமிழ்நாடு அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் | 8 |
| 3 | தேசிய தொழிற் பழகுநர் பயிற்சிகள் ( National Apprentice Training) | 9 |
| | அ. தனியார் துறையில் தொழிற்பழகுநர் பயிற்சிகள் | 9 |
| | ஆ. அரசு துறையில் தொழிற்பழகுநர் பயிற்சிகள் | 9 |
| 4 | கூடுதல் படிப்புகள் | 11 |
| 5 | வேலைவாய்ப்பு | |
| | அ. அரசுத்துறை வேலைவாய்ப்புகள் | 13 |
| | ஆ. தனியார் துறை வேலைவாய்ப்புகள் | 18 |
| | இ. அயல் நாட்டு வேலைவாய்ப்புகள் | 18 |
| **6** | சுயவேலைவாய்ப்பு | 20 |
| **7** | திறன்மேம்பாட்டுப் பயிற்சி | 30 |

## உயர்கல்வி

## Diploma Courses in Government Polytechnic Colleges

10ம் வகுப்புடன் இரண்டு வருட ITI தேர்ச்சி பெற்றவர்கள் பாலிடெக்னிக் கல்லூரிகளில் நேரடியாக இரண்டாம் வருடத்தில் (Lateral Entry) சேரலாம்.

| | |
|---|---|
| அடிப்படைக் கல்வித் தகுதி | **2** ஆண்டுகள் ITI படிப்பு (NTC Course passed) |
| படிப்பின் கால அளவு | **2** ஆண்டுகள் |
| தேர்வு செய்யும் முறை | அந்தந்த பாலிடெக்னிக் கல்லூரிகளில் மதிப்பெண் அடிப்படையில் கலந்தாய்வு முறை |
| தொடர்புடைய துறை | தொழில் நுட்ப கல்வி இயக்ககம்<br>Directorate of Technical Education,<br>Chennai - 25. |
| பல்தொழில்நுட்ப கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை | அரசு பாலிடெக்னிக் – 30<br>அரசு உதவி பெறும் தனியார் பாலிடெக்னிக் – **34**<br>சுயநிதி தனியார் பாலிடெக்னிக் **– 395** |
| கல்வியின் பயன்பாடு | அரசு மற்றும் தனியார் துறைகளில் இளநிலை பொறியாளர், கண்காணிப்பாளர், தொழில் நுட்ப உதவியாளர் போன்ற பணிவாய்ப்புகளை பெறலாம். சுய தொழில் தொடங்கலாம். அயல் நாட்டு வேலைவாய்ப்பையும் பெறலாம். |

## Diploma Courses Offered in Polytechnic Colleges

இரண்டு ஆண்டுகள் தேசிய தொழிற் பயிற்சி சான்றிதழ் (National Trade Certificate) பெற்றவர்கள் தாங்கள் பயின்ற தொழிற் பயிற்சியை சார்ந்த பட்டய படிப்பை (Diploma) தேர்வு செய்து படிக்கலாம். பாலிடெக்னிக் கல்லூரிகளில் அளிக்கப்படும் பட்டயப் படிப்புகள் விவரம் பின்வருமாறு:-

| |
|---|
| Automobile Engineering /Basic Engineering /Civil Engineering/ Computer Engineering/ Computer Networking/ Computer Science and Engineering/ Computer Technology/ Electrical and Electronics Engineering/ Electronics/ Electronics and Communication Engineering/ Garment Technology/ Home Textiles/ Information Technology/ Instrumentation and Control Engineering/ Marine Engineering/ Mechanical Engineering/ Machine Tool Maintenance & Repairs/ Refrigeration and Air Conditioning Engineering / Metallurgy/ Modern Office Practice/ Production Engineering/ Textile Processing/ Apparel Technology/Architectural Assistantship/Textile Technology /Fashion Technology. |

**தமிழ்நாட்டில் உள்ள அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் விவரம் பின்வருமாறு**

| வ.எண் | மாவட்டம் | பாலிடெக்னிக் அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1 | சென்னை மாவட்டம் | 1. தரமணி<br>2. டாக்டர் தர்மாம்பாள் பாலிடெக்னிக் (மகளிருக்கானது) தரமணி.<br>3. ஓட்டேரி<br>4. இன்ஸ்டிடியூட் ஆப் பிரிண்டிங் டெக்னாலஜி, தரமணி<br>5. இன்ஸ்டிடியூட் ஆப் டெக்ஸ்டைல் டெக்னாலஜி, தரமணி<br>6. அரசு தொழில் நுட்ப பயிற்சி மையம், கிண்டி. |
| 2 | மதுரை மாவட்டம் | மேலூர், திருமங்கலம், உசிலம்பட்டி மடக்குளம் (மகளிருக்கானது) |
| 3 | திருச்சி மாவட்டம் | சேத்துராபட்டி ஸ்ரீரங்கம், துவாக்குடிமலை |
| 4 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மகளிர் |
| 5 | விழுப்புரம் மாவட்டம் | சங்கராபுரம், திருக்கோயிலூர் |
| 6 | தர்மபுரி மாவட்டம் | பூமந்தாஉறல்லி |
| 7 | ஈரோடு மாவட்டம் | பெருந்துறை |
| 8 | கன்னியாகுமரி மாவட்டம் | நாகர்கோவில் |
| 9 | கரூர் | கடவூர் |
| 10 | கிருஷ்ணகிரி | கட்டிநாயனப்பள்ளி, ஊத்தங்கரை |
| 11 | பெரம்பலூர் | கீழக்கணவாய் |
| 12 | புதுக்கோட்டை | கந்தர்வக்கோட்டை, அறந்தாங்கி |
| 13 | உதக மண்டலம் | உதகமண்டலம் |
| 14 | தேனி மாவட்டம் | கோட்டூர், தேக்கம்பட்டி கிராமம் |
| 15 | தூத்துக்குடி மாவட்டம் | தூத்துக்குடி<br>பாரதியார் நூற்றாண்டு நினைவு மகளிர் பாலிடெக்னிக், எட்டயபுரம். |
| 16 | திருவண்ணாமலை மாவட்டம் | செய்யார், செங்கம் |
| 17 | திருவாரூர் மாவட்டம் | திருத்துறைபூண்டி |
| 18 | வேலூர் மாவட்டம் | ஜோலார் பேட்டை |
| 19 | அரியலூர் மாவட்டம் | கீழப்பழுவூர் |

**IRT POLYTECHNIC COLLEGES**

1. Bargur - Krishnagiri
2. Nemilicheri - Kancheepuram.

மேலும் விவரங்களுக்கு
www.tndte.com என்ற இணையதளத்தை காணலாம்.

**2. Part Time Diploma**

ITI தேர்ச்சி பெற்ற பின் இரண்டு வருட வேலை அனுபவத்தைக் கொண்டு பகுதி நேர டிப்ளமா படிக்கலாம்.(4 வருடங்கள்)

## 3.Work Integrated Diploma Programme

சில நிறுவனங்களில் வேலை செய்து கொண்டே டிப்ளமோ படிப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. இதற்கு AICTE-ல் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளமோ வழங்கப்படுகிறது.

**4.பொறியியல் பட்டப்படிப்பு – B.E.**

டிப்ளமோ முடித்த பின் பொறியியல் பட்டப் படிப்பினை (B.E) நேரடியாக இரண்டாம் ஆண்டு Lateral Entry முறையில் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கலாம். இதன் மூலம் வேலை செய்யும் நிறுவனங்களில் அடுத்த கட்ட பதவி உயர்வுக்கு வாய்ப்புகள் அதிகரிக்கும்.

## தொலைதுார கல்வி மூலம் பொறியியல் பட்டயப் படிப்புகள்
## DIPLOMA MEMBER OF INSTITUTION OF ENGINEERS
## (DIPIETE Equivalent to Diploma Engineering)

10–ம் வகுப்பு படித்தவர்கள் தொலை துார கல்வி மூலம் பொறியியல் பட்டயப் படிப்பு DIPIETE படிக்கலாம். DIPIETE கல்வித் தகுதி பொறியியல் பட்டயப் படிப்பிற்கு இணையானதாகும். அதன் விவரம் பின்வருமாறு. . . .

<table>
<tr><td>படிப்பின் விவரம்</td><td colspan="4">DIPIETE Equivalent to Diploma Engineering<br>1. Electronics and Telecommunication<br>2. Computer Science and Engineering</td></tr>
<tr><td>அடிப்படைக் கல்வித் தகுதி</td><td colspan="4">10–ஆம் வகுப்பு தேர்ச்சி</td></tr>
<tr><td>வயது</td><td colspan="4">14 வயது</td></tr>
<tr><td>படிப்பின் கால அளவு</td><td colspan="4">3 ஆண்டுகள் (தொலைதுாரக் கல்வி Distance Learning Course). 10 ஆண்டுகளுக்குள் தேர்வுகள் எழுதி முடிக்கப்பட வேண்டும்.</td></tr>
<tr><td rowspan="5">தேர்வு முறை</td><td colspan="4">தேர்வுத்தாள்களின் எண்ணிக்கை 15</td></tr>
<tr><td colspan="2">Section –A</td><td colspan="2">Section - B</td></tr>
<tr><td>Part I</td><td>Part II</td><td>Part-I</td><td>Part II</td></tr>
<tr><td>4 Subjects</td><td>4 Subjects</td><td>4 Subjects</td><td>3 Subjects</td></tr>
<tr><td colspan="4">Project Work and Practical Work</td></tr>
<tr><td>கல்வியின் பயன்பாடு</td><td colspan="4">பணிபுரிந்து கொண்டே தொலை துாரக்கல்வி வாயிலாக பொறியியல் பட்டயம் பெறலாம். அரசு மற்றும் தனியார் துறையில் இளநிலை பொறியாளர், தொழில் நுட்ப உதவியாளர் போன்ற பணிவாய்ப்புகளை பெறலாம்.</td></tr>
</table>

<u>**தொலைதூர கல்வி மூலம் பொறியியல் படிப்புகள்**</u>

## <u>ASSOCIATE MEMBER OF INSTITUTION OF ENGINEERS (AMIE)</u>
## (AMIE Equivalent to B.E / B.Tech Degree)

டிப்ளமோ படித்தவர்கள் தொலை தூர கல்வி மூலம் பொறியியல் படிப்பு (AMIE)படிக்கலாம். **AMIE** கல்வித் தகுதி பொறியியல் பட்டப் படிப்பிற்கு இணையானதாகும். அதன் விவரம் பின்வருமாறு. . . .

| | | | | |
|---|---|---|---|---|
| படிப்பின் விவரம் | AMIE Equivalent to B.E/ B.Tech Degree in<br>1. Architectural Engineering<br>2. Chemical Engineering<br>3. Civil Engineering<br>4. Computer Science and Engineering<br>5. Electrical Engineering<br>6. Electronic & Communication Engineering<br>7. Mechanical Engineering<br>8. Materials and Metallurgical Engineering<br>9. Mining Engineering<br>10. Production Engineering<br>11. Textile Engineering. | | | |
| அடிப்படைக் கல்வித் தகுதி | பல்தொழில்நுட்ப பட்டய படிப்பு **3** ஆண்டுகள் **(**Polytechnic Diploma) | | | |
| படிப்பின் கால அளவு | **6** ஆண்டுகள் **(**தொலைதூரக் கல்வி Distance Learning Course). | | | |
| தேர்வு முறை | **தேர்வுத்தாள்களின் எண்ணிக்கை** | | | |
| அடிப்படைக் கல்வித் தகுதி | Section A | Section B | Total Subject | Duration |
| 3 Years Diploma | 4 | 9 + Lab | 13 + Lab & Project | 6 Years |
| | <u>**Section A**</u> : Fundamental Engineering<br><br><u>**Section B :**</u><br>1.Architectural Engineering 2. Chemical Engineering 3. Civil Engineering 4. Computer Science and Engineering 5. Electrical Engineering 6. Electronic & Communication Engineering 7. Mechanical Engineering 8. Materials and Metallurgical Engineering 9. Mining Engineering 10. Production Engineering 11. Textile Engineering. | | | |
| கல்வியின் பயன்பாடு | பணிபுரிந்து கொண்டே தொலை தூரக்கல்வி வாயிலாக பொறியியல் பட்டம் பெறலாம். அரசு மற்றும் தனியார் துறையில் பொறியாளராக வேலைவாய்ப்பு பெறலாம். அயல்நாட்டு வேலைவாய்ப்பையும் பெறலாம். | | | |

## 5 ITI படித்த மாணவ / மாணவியர்கள் Degree படிக்கலாம்

தொழிற் பயிற்சி பயிலும் மாணவர்களின் தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைகழகம் போன்ற பல்கலைகழகங்களில் தொலைதூரக் கல்வியாக **B.A, B.Sc., B.B.A, B.C.A, B.Com.** ஆகிய பட்டப் படிப்புகளை படிக்கலாம் (இக்கல்வித் தகுதி வேலைவாய்ப்பிற்கு உகந்ததல்ல) மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்றவர்கள் அஞ்சல் வழி வாயிலாக பட்டப்படிப்பு (Degree) படிக்கலாம்.

**அஞ்சல் வழி கல்வி அளிக்கும் பல்கலைகழகங்கள் விபரம் பின்வருமாறு :–**

Madras University www.unom.ac.in

Madurai Kamaraj University www.mkuniversity.org

Bharathidasan University www.bdu.ac.in/

Bharathiyar University www.b-u.ac.in/

Manonmaniyam Sundaranar University www.tnuniv.ac.in /msu

Periyar University http://periyaruniversity.ac.in

Thiruvalluvar University www.thiruvalluvaruniversity.com

Mother Terasa Women's University www.motherterasawomen.univ.ac.in

Alagappa University www.alagappauniversity.ac.in

Annamalai University www.annamalaiuniversity.ac.in

## பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற தவறியவர்களுக்கான வாய்ப்புகள்
## Opportunities for 10th Failed Persons

### 1. பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற தவறியவர்கள் மீண்டும் தேர்வினை எழுதுவதற்கான வழிமுறைகள்

ஒவ்வொரு வருடமும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு மார்ச் / ஏப்ரல் மாதத்தில் நடைபெறுகிறது. இத்தேர்வில் தவறிய மாணவர்கள், மீண்டும் தேர்வு எழுத இரண்டு வகையான வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது.

01. சிறப்பு துணை தேர்வு ஜுன்/ ஜுலை மாதங்களில் நடைபெறும். இத் தேர்வை எழுதி தேர்ச்சி பெறுபவர்கள் அந்த கல்வி ஆண்டிலேயே தொடர்ந்து மேல் நிலைக் கல்வி / தொழில் நுட்பக் கல்வி பயிலலாம்.

02. ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் / அக்டோபர் மற்றும் மார்ச் / ஏப்ரல் ஆகிய மாதங்களில் இரண்டு துணைத்தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இத்துணைத்தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் அடுத்து வரும் கல்வி ஆண்டில் மேல்நிலைக்கல்வி / தொழில் நுட்பக் கல்வி பயிலலாம்.

03. இது தொடர்பான விவரங்கள்அறிய தாங்கள் பயின்ற பள்ளியை தொடர்பு கொள்ளலாம்.

இத்தேர்வுக்கான அறிவிப்பு விவரங்கள் அரசு தேர்வுகள் இயக்ககத்தால் வெளியிடப்படும்.

மேலும் விவரங்களுக்கு www.dge.tn.gov.inயை காணலாம்.

*******

## தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவ, மாணவியர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் நலத் திட்டங்கள்

தமிழக அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) தொழிற் கல்வி பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு பல விதமான சலுகைகளை அரசின் பல்வேறு திட்டங்கள் வாயிலாக வழங்கி வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண் | **திட்ட விவரம்** |
|---|---|
| 01 | விலையில்லா மிதி வண்டி |
| 02 | விலையில்லா மடிக் கணினி |
| 03 | விலையில்லா பாடப் புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள் |
| 04 | விலையில்லா சீருடைகள் |
| 05 | உதவித் தொகை மாதம் ரூ. 500/- |
| 06 | இலவச பேருந்து பயணச் சலுகை |
| 07 | விலையில்லா காலணிகள் |

மேற்கண்ட திட்டங்களின் பயன்களைப் பெற மாணவர்கள் அவரவர் பயிலும் தொழிற் பயிற்சி நிலைய முதல்வரை அணுகலாம்.

For further information –**www.tn.gov.in,**

**www.skilltraining.tn.gov.in**

## தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் பயிற்சிக் கட்டண சலுகை

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் இயங்கும் அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள், அரசு உதவி பெறும் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் வாயிலாகவும் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் கட்டணமின்றி இலவசமாக தொழிற் பயிற்சி வழங்கப்படுகிறது. தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் **50** சதவிகித இடங்கள் மாநில அரசின் ஒதுக்கீடாக வழங்கப்பட்டு, அதற்கென பயிற்சி கட்டணமாக, நகர்ப்புறத்தில் அமைந்துள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு ரூ.**12,000**/- வீதமும் கிராமப்புறத்தில் அமைந்துள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு ரூ.**10,000**/- வீதமும், ஆண்டுதோறும் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

## தேசிய தொழிற் பழகுநர் பயிற்சி (National Apprentice Training)

ITI தேர்ச்சி பெற்று தேசிய தொழில் பயிற்சி National Trade Certificate பெற்றவர்களுக்கு தேசிய தொழிற் பழகுநர் பயிற்சி (National Apprentice Training) தொழிற்சாலைகளில் அளிக்கப்படுகிறது. பயிற்சியின்போது உதவித் தொகை தொழிற் நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| அடிப்படைக் கல்வித் தகுதி | NTC தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் |
| பயிற்சி கால அளவு | **1** வருடம் முதல் **2** வருடங்கள் வரை (தொழிற்பிரிவுகளுக்கேற்ப) |
| தொடர்புடைய துறை | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்ககம், கிண்டி, சென்னை- **32.** |
| வழங்கப்படும் சான்று | பயிற்சியின் முடிவில் அகில இந்திய தொழிற் பழகுநர் தேர்வு நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்றவர்களுக்கு National Apprenticeship Certificate (NAC)வழங்கப்படுகிறது. |
| கல்வியின் பயன்பாடு | அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிமனை உதவியாளர், மெக்கானிக், டெக்னிஷீயன் போன்ற பணிகளையும், இராணுவத்தில் தொழில் நுட்ப பணிகளையும் பெறலாம். சுய தொழில் தொடங்கலாம். அயல் நாட்டு வேலைவாய்ப்பையும் பெறலாம். |

## தனியார்துறையில் தொழிற் பழகுநர் பயிற்சி (Apprentice Training)

ஐடிஐ பயிற்சி (National Trade Certificate) பெற்றவர்கள் தனியார் துறையில் தொழிற் பழகுநர் பயிற்சி பெற அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் அமைந்துள்ள தொடர் அறிவுரை மையம் (Related Instruction Centre)-ஐ அணுக வேண்டும்.

## அரசு துறை நிறுவனங்களில் தொழிற் பழகுநர் பயிற்சி

அரசு துறை நிறுவனங்களில் தொழிற் பழகுநர் பயிற்சி பெற, National Trade Certificate பெற்றவுடன் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்ய வேண்டும். தொழிற் பழகுநர் பயிற்சி பணிக் காலியிடங்கள் அரசுத் துறையின் மூலம் அறிவிக்கப்படும் நேர்வுகளில் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பின் அடிப்படையில் பரிந்துரை செய்யப்படுகிறது. தற்போது வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அறிவிக்கப்படும் அனைத்து பணிக்காலியிடங்களும், உச்ச நீதிமன்ற ஆணைக்கிணங்க, செய்தித்தாள்களிலும் அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. எனவே, வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அரசு நிறுவனங்களில் தொழிற் பழகுநர் பயிற்சி பெற நேரடியாகவும் விண்ணப்பிக்கலாம்.

மத்திய அரசு நிறுவனங்களால் அறிவிக்கப்படும் தொழிற் பழகுநர் பயிற்சி தொடர்பான விளம்பரங்கள் மத்திய அரசால் வெளியிடப்படும் Employment News வார இதழில் வெளிவரும்.

தொழிற்பழகுநர் பயிற்சி தென்னக ரயில்வே BHEL, HVF, SAIL, IGCAR, ISRO, துப்பாக்கி தொழிற்சாலை, வெடிமருந்து தொழிற் சாலை போன்ற மத்திய அரசு நிறுவனங்களில் அளிக்கப்படுகிறது. இந்நிறுவனங்களில் பயிற்சி பெற விரும்புவோர் நேரடியாக அந்த நிறுவனங்களுக்கே விண்ணப்பிக்கலாம் அல்லது Regional Directorate of Apprenticeship Training, CIT Campus, Guindy, Chennai 32 என்ற அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

தொழிற்பழகுநர் பயிற்சி அளிக்கும் மாநில அரசு நிறுவனங்கள் விவரம் பின்வருமாறு.

APPRENTICE OPPORTUNITIES IN STATE GOVERNMENT PUBLIC SECTORS

| SL.NO. | NAME AND ADDRESS OF THE ESTABLISHMENT | TRADE ASSIGNED |
|---|---|---|
| 01. | Co-op. Milk Producers Union Ltd, | Elech.Mech<br>Mech(R&AC)<br>Fitter<br>Electrician<br>Mech(MV),<br>Boiler Attender<br>Wireman<br>Lineman |
| 02 | Tamil Nadu Electricity Board | Instrument Machanic<br>Wireman, Electrician |
| 03. | Govt. Automobile Workshop | Mechanic Motor Vechile<br>Auto Electrician<br>COPA |
| 04. | T.N. State Health Transport Dept. | Electrician<br>Mech(Diesel)<br>Sheet Metal Worker |
| 05. | Transport Corporation | Sheet Metal Worker<br>Carpenter<br>Forger &H.T<br>Eletrician<br>Painter<br>Welder (G&E) |
| 06 | Highways and Rural Works | D'man (Civil) |
| 07 | Public Works Department | D'man(Civil) |
| 08. | Town and Country Planning | D'man (Civil) |
| 09. | TWAD Board | D'man (Civil). |

## வேலைவாய்ப்பிற்கான இதர தகுதிகள்

ஆங்கிலம் தெரிந்திருப்பது மத்திய அரசு பொது நிறுவனங்கள் மற்றும் இராணுவத்துறைகளான ARMY, NAVY மற்றும் AIRFORCE ஆகியவற்றில் நடக்கும் போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற பெரும் உதவியாக இருக்கும்.

மாநில அளவில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளின் சான்றிதழ்கள் பெற்றிருப்பின் இராணுவம் மற்றும் ரயில்வே பணிகளில் சேர்வதற்கு பயனுள்ளதாக இருக்கும்.

## கூடுதலான படிப்புகள்

ITI படிக்கும் பொழுதே மாணவர்கள்; கூடுதலாக சில Certificate Course-களை படிக்கும் பட்சத்தில் தங்களுடைய வேலை வாய்ப்பிற்கும், மேலும் பதவி உயர்வுக்கும் பயனுள்ளதாக அமையும் எந்த தொழிற் பிரிவைச் சேர்ந்தவர்கள் கூடுதலாக என்ன படிக்கலாம் போன்ற விவரங்கள் பின்வருமாறு.

| தொழிற் பிரிவு | கூடுதலான படிப்பு Certificate Course |
|---|---|
| Pattern Maker | Autocad, 3D Modelling , Solid Works |
| Instrument Mechanic | Autocad, CMM (Coordinate Measuring Machine) |
| Electrician, Wireman | Autocad, Plumbing |
| Machinist, Turner, Machinist (Grinder) | CNC, Autocad |
| Fitter, MMTM | Autocad, CNC |
| Mechatronics | CNC, Autocad |
| Mechanic Motor Vechicle (MMV) | Auto Electrician, Auto Air Conditioning, Wheel alignment & Balancing |
| Computer Operator Programme Assistant (COPA) | Animation, Multimedia |
| ICTSM | Hardware, Networking , CCTV |
| ELECTRONIC MECHANIC | Hardware, Mobile Phone Servicing, CCTV |
| WELDER | Advance Welding, CNC Welding |
| SHEET METAL WORKER | Welding , Autocad |

## கூடுதலான Certificate Course படிக்குமிடங்கள்

| Institute | Course | Fees |
|---|---|---|
| Advanced Training Institute Chennai (www.atichennai. org. in) | All Engineering Field | மிக குறைந்த கட்டணம் |
| National Film Development Corporation, Chennai. www.nfdcindia.com | Animation Multimedia | Tamil Nadu Skill Development Corporation-யுடன் இணைந்து இலவசமாக அளிக்கப்படுகிறது. |
| MSME Tool Room www.citindia.org | Shorterm and Long Term Courses | |
| MSME Development Institute, Chennai www.msmedi.chennai .gov.in | Shorterm Courses | |

- **ITI தேர்ச்சி பெற்றபின்** மாணவர்கள் **CTI (Central Training Institute - Chennai), ATI (Advanced Training Institute - Chennai)** and **FTI** போன்ற மத்திய அரசின் பயிற்சி நிலையங்களில்; Instructor Training எடுத்துக் கொள்ளலாம்.

### WIREMAN 'B' LICENCE பெறுவதற்கான வழிமுறை

எலக்ட்ரிஷியன், ஒயர்மேன் பிரிவில் ஐடிஐ தேர்ச்சி பெற்ற மாணவர்கள் Wireman 'B' Licence பெற்றால் அவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கும், சுய வேலைவாய்ப்பிற்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும். 'B' Licence பெறுவதற்கு உரிய விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

பூர்த்தி செய்த விண்ணப்பம்

1. Demand Draft for Rs. 500/- (in favour of The Secretary , Tamilnadu Electrical Licencing Board, Chennai )
2. ஐடிஐ –யில் படித்த மாணவர்களுக்கு Provisional National Trade Certificate.
3. Xerox Copy (Attested )
4. TC அல்லது SSLC Mark Sheet --- Xerox (Attested )
5. பாஸ் போட் சைஸ் போட்டோ ---3 Nos
6. ஒரு வெள்ளைக் காகிதத்தில் பயிற்சியாளரின் மூன்று கையொப்பம் மேற்கண்ட ஆவணங்களுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**THE SECRETARY , TAMILNADU ELECTRICAL LICENCING BOARD, THIRU.Vi. KA. INDUSTRIAL ESTATE, GUINDY, CHENNAI- 32**

## 'B' லைசென்ஸின் பயன்கள்

இந்த 'B' லைசென்ஸ் எடுத்தவர்கள் மட்டுமே வீடுகள் அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் Single Phase மற்றும; Three Phase வயரிங் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள முடியும். எனவே ஒவ்வொரு பயிற்சியாளரும் 'B' licence னை கட்டாயம் பெற வேண்டும்.

- **Electrician / Wiremen** மாணவர்கள் Plumbing பயிற்சியை கூடுதலாக பெற்றிருந்தால், நல்ல சம்பளத்துடன் நல்ல வேலை வாய்ப்பினை பெறலாம்.

## வேலைவாய்ப்பு
## EMPLOYMENT

### அரசுத்துறை வேலைவாய்ப்பு

தொழிற்பயிற்சி (ITI) முடித்த இளைஞர்களுக்கு மத்திய அரசு, மத்திய அரசு சார்ந்த நிறுவனங்கள், மாநில அரசு, மாநில அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பல்வேறு வகையான பணி வாய்ப்புகள் உள்ளன. மத்திய அரசு மற்றும் மத்திய அரசு சார்ந்த நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புகள் பெரும்பாலும் எழுத்து தேர்வு மற்றும் நேர்முக தேர்வு வாயிலாக நிரப்பப்படுகின்றன. இவற்றின் விவரம் பின்வருமாறு.

**1. இராணுவம் மற்றும் துணை இராணுவத்தில் பணிவாய்ப்புகள்**

| Sl. No | **Name of the Recruitement Agency** | **Name of the Post** |
|---|---|---|
| 1 | Military Engineering Services<br>www.mes.gov.in | Mate |
| 2. | National Dockyard,<br>Vishakapatinam,<br>Mumbai,<br>www.indiannavy.nic.in | Tradesman (Skilled)<br>Tradesman (Mate) |
| 3. | Indo Tibetan Border Police Force<br>www.recruitment.itbpolice.nic.in | Head Constable<br>Constable Pioneer<br>Head Constable Motor Mechanics<br>Constable /Tradesman |
| 4. | Border Security force<br>www.bsf.nic.in | Head Constable (Operator)<br>Head Constable (Fitter)<br>Fitter / Diesel Mechanic /<br>Automobile Mechanic /<br>Motor Mechanic |
| 5. | Shahastra Seema Bal<br>www.ssb.nic.in | Constable |
| 6. | Indian Coastguard<br>www.joinindiancoastguard.gov.in | Naviks (Domestic Branch) |
| 7. | Central Industrial Security Force<br>www.cisf.gov.in | Carpenter / Electrician |
| 8. | Central Reserve Police Force<br>www.crpfindia.com | Constable (Tradesman /<br>Fitter / Carpenter) |
| 9 | Indian Airforce<br>www.indianairforce.nic.in | Painter |

இராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கான சலுகைகள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| ➢ Starting Grade Salary Rs. 35,000/- per Month<br>➢ Insurance – Rs. 25 Lacs<br>➢ Job Security<br>➢ Pension<br>➢ Canteen facilities<br>➢ Scholarship for Children<br>➢ Medical Facilities ,etc | ➢ Food Free<br>➢ Accommodation free<br>➢ Transport free<br>➢ 30 Days Casual Leave<br>➢ 2 Months Duty Leave<br>➢ After retirement preference for employment in public sector |

**2. இரயில்வே பணிவாய்ப்புகள்**

| | | |
|---|---|---|
| 01. | Railway Recruitment Board<br>www.railwayrecruitment.co.in | Assistant Loco Pilot<br>Trade Apprentice<br>Technician Grade III<br>Group-D<br>Group –C<br>Junior Executive<br>Maintainer |
| 02. | Railway Protection Force<br>www.indianrailways.gov.in | Constable |

**3.மத்திய அரசு மற்றும் அதனைச் சார்ந்த இதர நிறுவனங்களின் பணிவாய்ப்புகள்**

| Sl.No. | Name of the Recruiting Agency and Website Address | Name of the Post |
|---|---|---|
| 1. | ISRO<br>www.isro.gov.in | Technician ‘B’<br>Fireman ‘A’<br>Draughtsman Technician |
| 2. | Indira Gandi Centre for Atomic Research<br>www.igcar.ernet.in | Fitter, Turner, Machinist, Electrician, Welder, Electronic Mechanic, Refrigeration and AC Mechanic, Carpenter, Instrument Mechanic<br>Trade Apprentice<br>Stipendary Trainee |
| 3. | Cochin Shipyard Limited.,<br>www.cochinshipyard.com | Workman<br>Post Crane Operator<br>Technical Staff Operator or Skilled<br>Grade-I |

| | | |
|---|---|---|
| 4. | Mazagon Dock<br>www.mazagondock.gov.in | Skilled Trade (Technician) |
| 5. | Bharat Petroleum Corporation Ltd.,<br>https://bhartpetroleum.com | General Workman (ITI) |
| 6. | Air India Air Transport Services Ltd.,<br>www.airindia.in | Junior Customer Agent<br>Customer Agent<br>Utility Agent Cum Ramp Driver |
| 7. | Indian Ordnance Factories<br>www.ofbindia.gov.in | Store Keeper<br>Telephone Operator<br>Durwan<br>Ward Sahayak<br>Semi Skilled Grade |
| 8. | Uranium Corporation Ltd.,<br>www.ucil.gov.in | Operational Trainee |
| 9. | Tamilnadu News Print and Papers Ltd.,<br>www.tnpl.com | Semi Skilled (B)<br>(Boiler Operators) |
| 10. | Security Printing and Minting Corporation of India<br>www.spmcil.com | Junior Technician |
| 11. | Indian Oil Corporation<br>www.iocl.com | Technical Attendant |
| 12. | Sail<br>www.sail.co.in | Attendant cum Technician Trainee |
| 13. | Bharat Heavy Electronics Ltd.,<br>www.careers.bhel.in | Artisan |
| 14. | Northern Coalfields Ltd., Singrauli<br>www.ncl.gov.in | Trainee (Electrician / Fitter / MMV) etc.), |
| 15. | Oil and Natural Gas Corporation Ltd.,<br>www.ongcindia.com | Junior Assistant Technician |
| 16. | Hindustan Petroleum Corporation<br>www.hindustanpetroleum.com | Technician (Operations) /Boiler Craftsman |
| 17. | National Thermal Power Corporation.,<br>www.ntpc.co.in | ITI Trainee |

**மாநில அரசு மற்றும் அதனை சார்ந்த நிறுவனங்களின் பணிவாய்ப்புகள்**

| SL. NO. | NAME AND ADDRESS OF THE ESTABLISHMENT | Name of the Posts |
|---|---|---|
| 01. | Co-op. Milk Producers Union Ltd, | Electronic Mechanic<br>Mech (R&AC)<br>Fitter<br>Electrician<br>Mech(MV),<br>Boiler Attender<br>Wireman<br>Lineman |
| 02 | Tamil Nadu Generation and Distribution Corporation (TANGEDCO) (TNEB) | Field Assistant,(Wireman, Electrician, Instrument Mechanic) |
| 03. | Motor Vechile Maintanance Dept. | Mechanic Motor Vechile<br>AUTO Electrician |
| 04. | T.N. State Health Transport Dept. | Electrician<br>Mechanic (Diesel)<br>Sheet Metal Worker |
| 05. | Transport Corporation | Sheet Metal Worker<br>Carpenter<br>Forger &H.T<br>Eletrician<br>Junior Mechanic(Painter, Forger Heat Treatment.<br>Carpenter)<br>Mechanic Motor Vehicle<br>Welder (G&E) |
| 06 | Corporation / Municipality. | Wireman, Electrician, Plumber. |
| 07 | Government Industrial Training Institute | Workshop Assistant,<br>Junior Training Officer. |
| 08 | TANSI | Welder, Sheetmetal Worker |
| 09 | TNPL | Motor Mechanic, Fitter, Turner, Welder, Electrician. |
| 10 | Highways and Rural Works | D'man (Civil) |
| 11 | Public Works Department, | D'man(Civil) |
| 12. | Town and Country Planning | D'man (Civil) |
| 13. | TWAD Board | D'man (Civil). |
| 14. | Chennai Metropolitian Water Supply and Sewearage Board | D'man (Civil), |

மேலும் இது தொடர்பான கூடுதல் விவரங்களை மேற்கண்ட பணியளிக்கும் நிறுவனங்களின் இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான விளம்பரங்களானது தினசரி ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களிலும், வேலைவாய்ப்பு பத்திரிக்கை(Employment News)-யிலும் வெளிவருகிறது. மேலும் பணிக்காலியிட விபரங்களை வேலைவாய்ப்புத் துறை இணையதளம் **www.tnvelaivaaippu.gov.in**ல் Advertised Vacancies என்ற தலைப்பிலும் காணலாம்.

## தன்னார்வ பயிலும் வட்டம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் தன்னார்வ பயிலும் வட்டம் இயங்கி வருகிறது. இத் தன்னார்வ பயிலும் வட்டங்கள் போட்டி தேர்வுகளுக்கான பொது அறிவு புத்தகங்கள், நாளிதழ்கள், வாராந்திர, மாதாந்திர செய்தி இதழ்கள் ஆகியவற்றுடன் பராமரிக்கப்படுகிறது. மேலும், போட்டி தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகளும் அவ்வப்போது நடத்தப்படுகின்றன. இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு அருகில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம்.

## Employment News-செய்தித்தாள்

மத்திய அரசின் பொது நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்பினை வாரம் ஒருமுறை வெளி வரும் ஆங்கில Employment News என்ற செய்தித் தாளிலிருந்து தெரிந்து கொள்ள முடியும்.

## வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வாயிலாக வேலைவாய்ப்புகள்

ITI தேர்ச்சி பெற்றவர்கள் தங்களது தொழிற் கல்வித் தகுதியை தங்களது மாவட்டத்தில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நேரிலோ, அல்லது வேலைவாய்ப்புதுறை இணைய தளம் வாயிலாகவோ பதிவு செய்து கொள்ளலாம். இணையதள முகவரி – **www.tnvelaivaaippu.gov.in**

